# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 10.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்சி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.1431/C/2023 (SA.12966/C/2022)

திரு N. சுந்தர் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர்,
இயக்குதலும் மற்றும் பராமரித்தலும், தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்,
தாம்பரம், சென்னை - 600 045. — பொது அதிகார அமைப்பு

**********

## இறுதி ஆணை

*இவ்வழக்கு 31.07.2025 அன்று இவ்வாணையத்தில் நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவில், மனுதாரரின் 05.05.2022 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய காலத்திற்குள் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால் சென்னை, தாம்பரம், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மானக்கழகம், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் (தெற்கு), செயற்பொறியாளர் / முன்னாள் பொதுத் தகவல் அலுவலரின் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தையும் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு சென்னை, தாம்பரம், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மானக்கழகம், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் (தெற்கு), செயற்பொறியாளர் / முன்னாள் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், சென்னை, தாம்பரம், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மானக்கழகம், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் (தெற்கு), செயற்பொறியாளர் (பொ) / தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு. A. சிவக்குமார் என்பவர் 10.06.2026 அன்று நேரில் ஆஜராகி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலரான திருமதி K. சாந்தி, செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மானக்கழகம், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் (தெற்கு), தாம்பரம் என்பவரின் விளக்கக் கடிதத்தினை இவவாணையத்தில் சமர்ப்பித்தார். அவரது*

*எழுத்துப்பூர்வமான விளக்கக் கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வாரியப்பணியில் இருந்து தான் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன் என்றும், மனுதாரரான திரு N. சுந்தர் என்பவரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கடந்த 19.09.2016 அன்று முல்லை நகர் மெயின் ரோட்டில் புதிய மின்கம்பம் அமைத்தது குறித்த முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார் என்றும், இது குறித்து எந்த பணியும் வாரியத்தின் வாயிலாக நடைபெறவில்லை என்றும், அப்பணிகள் நடைபெற்றதற்கான எவ்வித கோப்புகளும் மற்றும் அப்பணிகள் நடைபெற்றதற்கான M-Book-ல் எவ்வித பதிவுகளும் இல்லை என்றும், நடைபெறாத பணி குறித்து மனுதாரர் மீண்டும் மீண்டும் தகவல் கோருகிறார் என்றும், இது குறித்து ஆணையத்தின் வாயிலாக நடைபெற்ற விசாரணைகளில், மனுதாரரின் மனுவில் கோரும் பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்று வாரியத்தின் வாயிலாக பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் தனது விளக்கத்தினை ஏற்று இவ்வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்று, மனுதாரரின் ஆணை நிறைவேற்றப்படாமை மனு மீதான வழக்கிலிருந்து முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் விடுவிக்கப்படுகிறார் என்று இவ்வாணையத்தின் வாயிலாக ஆணையிடப்படுகிறது.*

**ஒம்/- ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.1431/C/2023 (SA.12966/C/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின்பகிர்மான வட்டம், தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகம்,
தாம்பரம், சென்னை - 600 045.

**<u>வழக்கு எண்.NC.1431/C/2023 (SA.12966/C/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர்,
இயக்குதலும் (ம) பராமரித்தலும்,
சென்னை மின்பகிர்மான வட்டம், தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகம்,
தாம்பரம், சென்னை - 600 045.

**<u>வழக்கு எண்.NC.1431/C/2023 (SA.12966/C/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர்,
இயக்குதலும் (ம) பராமரித்தலும்,
சென்னை மின்பகிர்மான வட்டம், தெற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகம்,
தாம்பரம், சென்னை - 600 045.

**<u>வழக்கு எண்.NC.1431/C/2023 (SA.12966/C/2022)</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு N. சுந்தர்,
எண்.3A/32. முதல் குறுக்குத்தெரு,
ரங்கநாதபுரம், தாம்பரம்,
சென்னை - 600 045.

Copy to: File
SNPS / 11.06.2026